இயக்குநர்
கால்நடை பராமரிப்பு (ம) மருத்துவப் பணிகள்
24 MAR 2023
சென்னை - 600 035

28 MAR 2023

சுருக்கம்

பணியமைப்பு – தமிழ்நாடு அமைச்சுப் பணி – கருணை அடிப்படை பணி நியமனம் – திரு.அ.ராஜாங்கம், த/பெ (லேட்) திரு.அ.அங்கமுத்து, இளநிலை உதவியாளர் பதவியில் பணி நியமனம் – பணிவரன்முறை செய்து – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் (காப–7) துறை

திருவள்ளுவர் ஆண்டு 2054, சுபகிருது பங்குனி மாதம் 03–ம் நாள்

அரசாணை (டி) எண்.187 நாள் 17.03.2023

014004

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 23.01.2020
2. கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் ஆணையரின் கடித ந.க.எண். 13655/ஆர்3/2009, நாள் 11.11.2022 (ம) 13.1.2023.

------

**ஆணை:**

மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் ஆணையரின் கடிதங்களில், சேலம் மண்டலம், தம்மம்பட்டி, கால்நடை மருந்தகத்தில் கால்நடை பராமரிப்பு உதவியாளராக பணிபுரிந்து 02.01.2008 அன்று பணியிடை மரணமடைந்த திரு.அ.அங்கமுத்து என்பவரது மகன் திரு.அ.ராஜாங்கம் என்பவருக்கு கருணை அடிப்படையில் கோயம்புத்தூர் (கால்நடை பராமரிப்பு) உதவி இயக்குநர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணி நியமனம் வழங்கப்பட்டு, தனியர் 12.02.2020 முற்பகல் முதல் பணிபுரிந்து வருகிறார் என்றும் தனியரின் அனைத்து ஆவணங்கள்/சான்றுகள் சரிபார்க்கப்பட்டது என்றும் எனவே தனியரின் பணியினை அவர் இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாளான 12.02.2020 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குமாறு அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் ஆணையரின் கருத்துருவை உரிய ஆவணங்களுடன் அரசு நன்கு ஆய்வு செய்து, கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்யப்பட்ட திரு.அ.ராஜாங்கம் என்பவரின் பணியினை இளநிலை உதவியாளர் பணியிடத்தில் அவர் பணியில் சேர்ந்த நாளான 12.02.2020 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இது தொடர்பாக தனியரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்யுவும் அறிவுறுத்தப்படுகிறது. மேலும் அவ்வாறு முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்வதால், ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதியத் நிலுவை தொகை ஏதும் இருப்பின் அவற்றைப் பெற விதிகளின்படி தனியர் தகுதியடையவராகிறார்.

3. இவ்வரசாணை தொழிலாளர் நலன் (மற்றும்) திறன் மேம்பாட்டுத் துறையின் அ.சா.எண்.1270/க்யூ-1/2023-1, நாள் 28.02.2023 மற்றும் மனிதவள மேலாண்மை துறையின் அ.சா.எண்.4231444/ஜி2/2023, நாள் 14.03.2023ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஆ. கார்த்திக்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
இயக்குநர், கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள், சென்னை-35.
திரு. அ. ராஜாங்கம், இளநிலை உதவியாளர், (இயக்குநர், கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள், சென்னை-35 வழியாக)
மாநில கணக்காயர், சென்னை-18/18(பெயரில்)
சம்பந்தப்பட்ட மாவட்ட கருவூல அலுவலர் .

<u>நகல்</u>
தொழிலாளர் நலன் (மற்றும்) திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை-9.
மனிதவள மேலாண்மைத் துறை, சென்னை-9.
அரசு முதன்மைச் செயலளாரின் தனிச் செயலாளர், கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு /உதிரிப்படிகள்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர் 20.3.23